# முஸ்லிம்களே! முஸ்லிம்களாக மட்டுமே வாழுங்கள்!!

இஸ்லாத்தின் உண்மைகளை உணரவைத்து, அல்லாஹ்வின் அங்கீகாரம் பெற்ற இஸ்லாத்தை மட்டுமே மக்கள் பின்பற்றும் நிலை உண்டாக வேண்டும் என்ற இலட்சியத்தோடு செயல்பட்டுவரும் எங்களைப் பற்றித் தப்புப் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. வெளியீடு 7-ல் எங்கள் நோக்கங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருந்தும், மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.

எங்களுக்கென்று ஒரு தனிக்கொள்கை, திட்டம், இயக்கம் இல்லை. குர்ஆன் எங்கள் கொள்கை, சுன்னத் எங்கள் திட்டம், இஸ்லாம் எங்கள் இயக்கம். குர்ஆன் 41:33 கட்டளையிடுவதுபோல் ‘**முஸ்லிம்களில் உள்ளவர்கள்**’ என்பதற்கு மேல் எதுவும் சொல்லவில்லை. குர்ஆன், ஹதீஸ்களுக்கு மாற்றமாக எது எங்களிடம் இருந்தாலும், அதை ஓர் அறிவிலி சுட்டிகாட்டினாலும், உண்மை என்றால் ஏற்று, திருந்திக்கொள்வோம். கோடி கோடி நன்றி செலுத் துவோம். நாங்கள் போராடி ஒழிக்க விரும்புவது இஸ்லாத் தில் குர்ஆன், ஹதீஸ்களுக்கு முரணாக நுழைந்துள்ள இடைச்செருகல்கள், மூடக்கொள் கைகள், குருட்டுச் சடங் குகள் இவற்றை மட்டுமேயாகும். முன்சென்ற மக்கள் இப்படித்தான் வழிகெட்டார்கள் என்று குர்ஆன் தெளிவு படுத்திக் கொண்டிருக்கிறது. (பார்க்க 2:130, 5:104, 7:28, 10:78, 21:53, 26:73)

நாங்கள் பேசுவது, எழுதுவது குர்ஆன், ஹதீஸ்கள் ஆதாரங்களுடனேயாகும். யூகங்கள், கற்பனைக் கட்டுக் கதைகள் எங்களிடம் இல்லை. மஸ்ஜிதுகளில் அல்லாஹ் வைப்பற்றிப் பேச அனுமதி இல்லை. மஸ்ஜிதுகள் இன்று இஸ்லாத்தின் ஆணிவேரான தௌஹீதைக் குழி தோண்டிப் புதைக்கப் பயன்படுகின்றன. கபுரு வணக்கம், சடங்குகள், இன்றைய சாக்கடை அரசியல், ஆட்டம் பாட்டம், குர்ஆன், ஹதீஸ்களுக்கு முரண்பட்ட, மக்களுக்கிடையில் பிளவு களை உண்டாக்கி மோதச் செய்யும் மத்ஹபுகள், தரீக்காக் கள் இவைபற்றி எல்லாம் மஸ்ஜிது களில் பேச அனுமதி யுண்டு. மௌலிதுகள் என்று அல்லாஹ்வைவிட்டு, அவனல்லாதவர்களை அழைக்க, உதவிதேட மஸ்ஜிது

களில் தாராளமாக அனுமதி உண்டு. அல்லாஹ்வை வயும், ரஸூலையும் மட்டும் பற்றிப் பேச மஸ்ஜிதுகளில் அனுமதி இல்லை. விந்தையாக இல்லை? **"அல்லாஹ்வுடைய மஸ்ஜிதுகளில் அல்லாஹ்வின் பெயரைச் சொல்லி நினைவு கூர்வதைத் தடுத்து, அவற்றைப் பாழாக்குப வனைவிட, மகா அக்கிரமக்காரன் யார்? இத்தகையோர் அச்சமுடனின்றி பள்ளிவாயில்களில் நுழைவதற்குத் தகுதியே இல்லாதவர்கள். இவர்களுக்கு இவ்வுலகிலும் இழிவுதான். மறுமையிலும் கடுமையான வேதனையுண்டு."**

*அல்குர்ஆன் 2:114*

**"நிச்சயமாக மஸ்ஜிதுகள் அல்லாஹ்வுக்காவே இருக்கின்றன. எனவே (அவற்றில்) அல்லாஹ்வுடன், எவரையும் (பிரார்த்தித்து) அழைக்காதீர்கள்."**

*அல்குர்ஆன் 72:18*

இந்த இறை வசனங்களுக்கு மாற்றமாக அல்லாஹ் வைப் பற்றி மஸ்ஜிதுகளில் பேச அனுமதி மறுப்பவர்கள் நிலை என்ன? நாங்களோ அல்லாஹ்வின் கஃபாவில் அவனது தூதருக்கே அனுமதி மறுக்கப்பட்டது. துரத்தப்பட் டார்கள், ஆம்! உண்மை விரட்டப்பட்டது. அந்த உண்மையை எடுத்துச் சொல்லும் நாங்கள் விரட்டப்படுவதில் ஆச்சரி யம் என்ன? என்று ஆறுதல் அடைகிறோம், இது சத்தியம்! பொய் அழிந்தே தீரும் மெய் வந்தே தீரும் கஃபாவை விட்டு அசுத்தங்கள் அகற்றப்பட்டதுபோல், மஸ்ஜிதுகள் பரிசுத்தப் படுத்தப்பட்டு, அல்லாஹ்வை மட்டும் அழைக்கும் காலம் தூரத்திலில்லை. குர்ஆனையும், ஹதீஸ்களையும் மட்டும் பேசும்காலம் வேகமாக வந்து கொண்டிருக்கிறது இன்ஷா அல்லாஹ்.

நாங்கள் மக்களுக்கிடையில் குழப்பம் உண்டாக்கு வதாகப் பிரச்சாரம் செய்கிறார்கள். தோன்றிய பிரிவுகள், பிளவுகள் போதாதென்று நாங்களும் புதிய ஒரு பிரிவை ஆரம்பித்திருந்தால், அவர்கள் சொல்வதில் நியாயம் இருக்கலாம். (இன்று பீ.ஜை. ஏழு பிரிவுகளை உண்டாக்கி மத்ஹபு பிரிவுகலை தகமாக்கிவிட்டார்) நபி(ஸல்) மறை வுக்குப்பின் தோன்றிய எந்தப் பிரிவிற்கும் அல்லாஹ்வின்

அங்கீகாரம் இல்லை. நபி(ஸல்) அவர்களும், **“தோன்றும் 73 பிரிவில் ஒரு பிரிவே நேர்வழி நடப்பவர்கள். அவர்கள் “நானும், எனது தோழர்களும் எப்படி நடக்கிறோமோ அப்படியே நடப்பவர்கள்”** என்று தெளிவாகச் சொல்லி யிருக்கிறார்கள். அவர்கள் தங்களை **‘முஸ்லிம்’** என்று சொன்னதுபோல, நாங்களும் எங்களை **‘முஸ்லிம்’** என்று மட்டுமே சொல்லுகிறோம். அவர்கள் ஹனபி, ஷாபி, மாலிகி, ஹன்பலி (இப்போது ஜாக், ததஜ, இதஜ) என்று சொல்லவில்லை. நாங்களும் சொல்லமாட்டோம். அவர்கள் செய்து காட்டிய தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ், ஏவல், விலகல், அனைத்தையும் அவர்கள் எவ்வாறு செய்து காட்டினார்களோ, அதில் அணு அளவும் கூடக் குறையச் செய்யாமல் அப்படியே செய்கிறோம். நபி(ஸல்) அவர்கள், **‘பித்அத்’** அனைத்தும் வழிகேடுகள், நரகில் சேர்க்கும் என்று சொன்னார்கள். பித்அத்தில் நல்லது, கெட்டது என்று பிரித்துக் கூற வில்லை, ஆகவே அதை ஏற்று, மார்க்கத்தில் நபி(ஸல்) அவர்கள் மறைவுக்குப்பின், நுழைக்கப்பட்டு உள்ள அனைத்தையும் **‘பித்அத்’** என்று தள்ளி விடுகிறோம். ஆம்! சுமார் 1430 ஆண்டுகளுக்கு முன் **‘இஸ்லாம்’** எப்படி இருந்ததோ, அதையே இஸ்லாமாக ஏற்றுச் செயல்படுகிறோம். பிறருக்கும் போதிக்கிறோம். எந்தப் புதிய பிரிவிலும் நாங்கள் இல்லை. எங்களைக் குழப்பவாதிகள் என்றால் அது நியாயம்தானா? இஸ்லாத் தில் இல்லாததை உள்ளதாகச் சொல்லும்போது, அதை வன்மையாகக் கண்டிக்க அல்லாஹ்வும் கட்டளையிடு கிறான். நபியும் கட்டளையிடுகிறார்கள்.

**“முஃமினான ஆண்களும், பெண்களும் ஒருவருக் கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர். அவர்கள் நலனைத் தூண்டுகிறார்கள். தீயதை விட்டும் விலக்குகிறார்கள். தொழுகையை நிலைநாட்டி, ஜகாத் கொடுக்கிறார்கள். அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக் கும் வழிபடுகிறார்கள் அவர்களுக்கே அல்லாஹ் அருள் புரிகிறான்”.** *அல்குர்ஆன் 9:71*

**"மார்க்கப் புறம்பான செயல் நடக்கக் கண்டால், கைகளால் தடுக்கவும், முடியாவிட்டால் நாவினால் தடுக்கவும் அதுவும் முடியாவிட்டால் மனதிலாவது தவறு என்று வருந்தவும் இது ஈமானின் இறுதி நிலையாகும்".**

*நூல்கள் : முஸ்லிம், முவத்தா, அபூதாவூது, நிர்மிதி, நஸயீ)*

இதன்படி நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும் போது, குர்ஆன், ஹதீஸ்கள் ஆதாரமில்லாத, முன்னோர் களின் மூடக் கொள்கைகளில் மூழ்கி இருக்கும். மக்கள் ஆத்திரப்படத்தான் செய்வார்கள். பிரச்சினைகள் எழத் தான் செய்யும். இவை தவிர்க்க முடியாதவை. பிரச்சினை கள் எழாமல் மார்க்கத்தை நிலைநாட்டுவது சாத்திய மானால், நபி(ஸல்) அவ்வாறே செய்து காட்டியிருப்பார்கள். நபி(ஸல்) அரபுகளிடமிருந்த மூடக்கொள்கைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தபோது ஏற்பட்ட கொந்தளிப்பு, குமுறல், பிளவுகள், சண்டை சச்சரவு, கணவன் மனைவி பிரிவு, பெற்றோர் பிள்ளைகள் பிரிவு, உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட மனக்கசப்புகள், இவை எல்லாம் ஏட்டில் எழுதி மாளாது. தவிர்க்க முடிந்திருந்தால் நபி(ஸல்) அவர்கள் தவிர்த்திருப்பார்கள், இப்றாஹீம் (அலை) சந்ததிகளான முஸ்லிம்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டவர்கள்தாம் அந்த அரபிகள். தங்களுக் குள் இருக்கும் ஒற்றுமையை இந்த முஹம்மது தனது பிரச்சாரத்தின் வாயிலாகக் குலைத்துப் பிளவு உண்டாக் கிக் குழப்பம் விளைவிப்பதாகக் குரைஷ்கள் நபி(ஸல்) அவர்கள்மீது குற்றம்சாட்டினார்கள். நபி(ஸல்) அவர்கள் உடனே தமது பிரச்சாரத்தை நிறுத்திவிட்டார்களா? இல்லையே! அன்று போல் இன்றும் சத்தியத்தை எடுத் துச் சொல்லும்போது, சத்தியத்தை மறுப்பவர்களால் குழப் பம் ஏற்படத்தான் செய்யும். அதற்காகச் சத்தியத்தை எடுத்துச்சொல்லாமல் விட்டு விடுவதா? நபி(ஸல்) அவர் கள் வழியல்லவே அது. குர்ஆனுக்கும், ஹதீஸ்களுக்கும் மாற்றமாக, நான்கு இமாம்களின் சொல்லையும் மீறிச் சத்தியத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, மார்க்கத் தைத் தொழிலாக்கிக் கற்பனைக் கட்டுக்கதைகளை மார்க்க மாகச் சொல்லிக்கொண் டிருக்கிறார்கள். எந்த

இமாமும் தன்னைக் கண்மூடி பின்பற்றும்படி (தக்லீத்) சொல்ல வில்லை எங்களைத் தக்லீத் செய்வது ஹராமா கும் என்று சொல்லி யிருக்கிறார்கள், மார்க்கத்தைப் பிழைப் பாக ஆக்கிக் கொண்டவர்கள் தங்கள் சௌகரியத்திற் காக இந்தத் தக்லீத் மூலம் மக்களுக்கிடையே வேற்றுமை களையும் பிளவுகளையும் குழப்பங்களையும் உண்டாக்கி வைத்துக்கொண்டு, அதன்வழி அவர்களே உலக ஆதாயம் அடைவதோடு, எங்களைக் குழப்பவாதிகள் என்று மக்களிடம் கதை யளக்கிறார்கள். எத்தனைக் காலத் திற்கு மக்களை ஏமாற்ற முடியும்? மக்களும் இன்று விழித்துக் கொண்டார்கள். மார்க்கம் என்றால் குர்ஆன், ஹதீஸ் ஆதாரம் எங்கே? என்று கேட்கத் தொடங்கி விட்டார்கள். யூகங்களுக்கும், கற்பனைக் கட்டுக் கதை களுக்கும் ஆதாரம் இருந்தால் அல்லவா காட்ட முடியும். குழம்பிப்போய் முஸ்லிம்கள் செய்யக்கூடாத செயல்களைச் செய்கிறார்கள் சொல்கிறார்கள்.

இவர்கள் என்ன ஆலிம்களா? முன்சென்ற அறிஞர் களெல்லாம் நரகவாதிகளா? அவர்களுக்குத் தெரியாதது இவர்களுக்குத் தெரிந்து விட்டதா? 1000 ஆண்டுகளாக மக்கள் கடைப்பிடித்து வருவதைத் தவறு என்கிறார்களே? மக்கள் உலக முழுதும் செய்து வருவதைத் தவறு என் கிறார்களே என்று அன்றைய குரைஷ்களின் வாதங்களை எடுத்துச் சொல்லி, மக்களைத் திசை திருப்புகிறார்கள். இவை அனைத்தும் அன்றைய குரைஷ்களால் கேட்கப் பட்டு அனைத்திற்கும் அழகான பதில்களை அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான். வாருங்கள் காட்டுகிறோம். இவர்களைவிட அவர்கள் இந்தக் கேள்விகளைக் கேட்க உரிமை பெற்றவர்களாக இருந்தார்கள். முஸ்லிம்கள் என்று சொல்லிக்கொள்ள இப்ராஹீம்(அலை) அவர்களின் சந்ததி களான அவர்களுக்கு மிகுந்த உரிமை இருந்தது.

1000 ஆண்டுப் பெருமையை இவர்கள் பேசினால், 3500 ஆண்டுப் பெருமையை அவர்கள் பேசினார்கள். இவர்களிடமுள்ள அறிஞர்களைவிடப் பெரும், பெரும் அறிஞர்கள் அவர்களிடையே இருந்தார்கள். இவர்களின்

இந்த வாதங்கள் உண்மையானால், அவர்கள் வெற்றியடைந் திருக்க வேண்டுமே! இவர்களது அகராதியில் குர்ஆனை யும், ஹதீஸ்களையும் பேசுவது, வீண் பேச்சு, குழப்பம், பைத்தியக்காரத்தனம். இமாம்களுக்கும் 200 ஆண்டுகளுக் குப் பின் மார்க்கத்தைத் தொழிலாக்கியவர்களின் கட் டுக் கதை களையும், கற்பனைகளையும், யூகங்களையும் பேசுவது பயனுள்ள பேச்சு! வணக்கம்!! இபாதத்!!! என்ன வினோதம் பாருங்கள்! குற்றவாளியை நிரபராதியாக்கச் சட்டத்தின் ஓட்டைகள் வக்கீலுக்கு ஆதாரம். இவர்களின் நிலையும் அதுவே. சத்தியத்தை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதைவிடச் சத்தியத்தை மக்களிடமிருந்து மறைக்கவேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு உள்ளனர். குர்ஆன் வசனங்களுக்கு மாற்றமாக, மார்க் கத்தைக்கொண்டு அவர்கள் பிழைப்பு நடத்துவதுதான் இதற்குக் காரணமாகும்!

எங்கள் பேச்சுக்களை மக்கள் கேட்கக் கூடாது எங்கள் பிரசுரங்களை மக்கள் பார்க்கக் கூடாது இவற்றில் குறியாக இருக்கும் அன்பர்களை, “அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகாதீர்கள்” என்று கேட்டுக் கொள் கிறோம். யார் சொன்னாலும், **“சொல்லைக்கேட்டு, அழ கானதைப் பின்பற்றுவார்கள். அல்லாஹ் நேர்வழியில் செலுத்துபவர்கள் இத்தகையோர்தாம். இவர்கள்தாம்** நல்லறிவுடையோர் இவர்களுக்கே நற்செய்தி கூறுங் கள்”.(39:17,18) என்ற தெளிவான குர்ஆன் வசனங்களை யும், சொல்லும் சொல்லைக் கவனி சொல்லுபவனைக் கவனிக்காதே என்ற அலீ(ரழி) அவர்களின் அறிவுரையை யும் நன்கு சிந்தித்துப் பாருங்கள். **“நீங்கள் குர்ஆனைக் கேட் காதீர்கள். அதில் (குழப்பஞ் செய்து) கூச்சலிடுங்கள்”** (41:26) என்று காஃபிர்கள் கூறியதை, அல்லாஹ் சுட் டிக் காட்டுவதைக் கவனியுங்கள்.

**“அல்லாஹ்வும் சொல்ல வேண்டிய தில்லை, ரசூலும் சொல்ல வேண்டிய தில்லை, இமாம்களும் சொல்லத் தேவை யில்லை. நாங்கள் இமாம்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றத்தான் செய்வோம்”** என்பவர்களுக்கு நாம் உபதேசிக்கவில்லை. அவர்களை அழைக்கவுமில்லை.

எங்களையும் குருட்டுத்தனமாகப் பின்பற்றி நாளை குற்றக் கூண்டில் நிறுத்தி விடுவார்கள். சிந்தித்து விளங்குபவர்கள் மட்டுமே முஸ்லிமாக இருக்க முடியும். எங்களிடம் ஆதாரங்கள் கேட்டு, குர்ஆனிலும் ஹதீஸ்களிலுமுள்ள ஆதாரங்களைப் பார்த்து, அவர்களாக விளங்கிச் செயல்படுகிறவர்களை மட்டுமே நாங்கள் அழைக்கிறோம்.

**"(நபியே!) கூறும், உண்மையான இது உம் இறைவனால் அருளப்பட்டது. விரும்பியவர்கள் விசுவாசிக்கலாம், விரும்பாதவர்கள் நிராகரிக்கலாம் அக்கிரமக்காரர்களுக்கு நாம் நரகத்தைச் சித்தப்படுத்தி வைத்துள்ளோம்." அல்குர்ஆன் 18:29**

வெளியீடு : 10

தேதிக 24.7.1985.